# 12 ஆகஸ்ட் 2023 தினசரி நடப்பு நிகழ்வுகள்

## முக்கிய தினங்கள்

### சர்வதேச இளைஞர் தினம்




- 1999 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை இளைஞர்களுக்குப் பொறுப்பான அமைச்சர்களின் உலக மாநாட்டின் பரிந்துரையின்படி ஆகஸ்ட் 12 ஆம் தேதியை **சர்வதேச இளைஞர் தினமாக** நிறுவப்பட்டது.
- இளைஞர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் செயல்முறைகளில் அவர்களின் ஈடுபாட்டை மேம்படுத்தவும் இந்த நாள் நிறுவப்பட்டது.
- **கருப்பொருள்: "இளைஞருக்கான பசுமைத் திறன்கள்: நிலையான உலகை நோக்கி"**

### தேசிய நூலகர் தினம்

- இந்திய நூலக அறிவியலின் தந்தை என அழைக்கப்படும் முனைவர் **சீ.இரா.அரங்கநாதன்** பிறந்த தினமான ஆகஸ்ட் 12–ஆம் தேதி நூலகர் தினமாக கொண்டாடப்படுகிறது.

நூலக அறிவியலின் **ஐந்து** விதிகளை உருவாக்கினார்.

1. புத்தகங்கள் பயன்பாட்டுக்கு
2. ஒவ்வொரு வாசகரிடமும் அவரவர் புத்தகம் உள்ளது
3. ஒவ்வொரு புத்தகத்திற்கும் அதன் வாசகர் உண்டு
4. வாசகர்களின் நேரத்தை மிச்சப்படுத்துங்கள்
5. நூலகங்கள் வளர்ந்து வரும் நிறுவனங்கள்.

## செய்திகளில் இடம் பெற்ற நபர்கள்

### பிரபல அணு இயற்பியலாளர் பிகாஷ் சின்ஹா காலமானார்



- பிரபல அணு இயற்பியல் விஞ்ஞானி பிகாஷ் சின்ஹா வயது முதிர்வு காரணமாக தனது 78வது வயதில் காலமானார்.
- "2001 இல் பத்மஸ்ரீ மற்றும் 2010 இல் பத்ம பூசண் விருதுகளைப்" பெற்ற அவர், சாஹா அணுக்கரு இயற்பியல் நிறுவனம் மற்றும் வேறுபட்ட ஆற்றலுக்கான சைக்ளோட்ரான் மையத்தின் முன்னாள் இயக்குநராக இருந்தார்.

- சின்ஹா அணு இயற்பியல், உயர் ஆற்றல் இயற்பியல், குவார்க் குளுவான் பிளாஸ்மா மற்றும் ஆரம்பகால பிரபஞ்ச அண்டவியல் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர்.
- ஜெனீவாவில் உள்ள அணு ஆராய்ச்சிக்கான ஐரோப்பிய அமைப்பில் நடந்த சோதனைகளில் பங்கேற்க முதன்முறையாக இந்தியக் குழுவை வழிநடத்தினார்.
- இங்கிலாந்தில் சுமார் 12 ஆண்டுகள் வாழ்ந்த சின்ஹா, இந்தியாவுக்குத் திரும்பிய பிறகு 1976 இல் பாபா அணு ஆராய்ச்சி மையத்தில் சேர்ந்தார்.
- 1987 இல் அவர் மாறி ஆற்றல் சைக்ளோட்ரான் மையத்தின் இயக்குநராக நியமிக்கப்பட்டார்.
- அவர் 2009 வரை சாஹா இன்ஸ்டிடியூட் ஆஃப் நியூக்ளியர் பிசிக்ஸ் இயக்குநராக ஒரே நேரத்தில் பொறுப்பேற்றார்.

## காலமானார் எழுத்தாளர் வாய்மைநாதன் (86)



- வேதாரண்யத்தை அடுத்த வாய்மேடு கிராமத்தைச் சேர்ந்த எழுத்தாளர்– கவிஞர் வாய்மைநாதன் (86) காலை உடல்நலக்குறைவால் காலமானார்.
- அரசுப் பள்ளி ஆசிரிய ராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர் கவிஞர் வாய்மைநாதன். மரபுக் கவிதையில் பல்வேறு படைப்புகளை எழுதியவர். கடந்த 1986–இல் இவர் எழுதிய "நேதாஜி காவியம்" தமிழ் வளர்ச்சித் துறையின் நிதி உதவியைப் பெற்று வெளியிடப்பட்டது.
- இந்தக் காவியம் ஹிந்தி மொழியில் "வாங்க்காசிங்க்" (1999) என்ற தலைப்பில் வெளியாகியுள்ளது.
- 2008–இல் வெளியான "கப்பலுக்கு ஒரு காவியம்" (வ.உ.சி. வரலாறு) அந்த ஆண்டுக்கான தமிழ் வளர்ச்சித் துறையின் பரிசுக்கு தேர்வானது.
- "மதுரை வீரன்" (கவிதை நாடகம்), புதிய மனிதன் (சிறுகதைத் தொகுப்பு), "தியாகி களப்பால் குப்பு" (வாழ்க்கை வரலாறு), வெண்மணிக் காப்பியம், நாலி (புதினம்) உள்ளிட்ட பல நூல்களையும் இவர் எழுதியுள்ளார்.

# விளையாட்டு

## கேரளாவின் ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள புன்னமடா ஏரியில் 69வது நேரு டிராபி படகுப் போட்டி நடைபெறுகிறது.



- ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமையன்று நடைபெறும் படகுப் போட்டியில், "19 – சுந்தன் வல்லோம்கள்" அல்லது "பாம்பு படகுகள் உட்பட 72 படகுகள்" பங்கேற்கும்.
- காலை அமர்வில் சிறிய படகுகளின் ஹீட்ஸ் சுற்றுடன் பந்தயம் தொடங்கும். பாம்பு படகுகளின் ஹீட்ஸ் சுற்று இன்று பிற்பகல் நடைபெற

SHANMUGAM IAS ACADEMY

உள்ள தொடக்க அமர்வுக்குப் பிறகு தொடங்கும். இறுதிப் போட்டிகள் மாலையில் நடைபெறும்.

- ❖ படகு கவிழ்ந்தால், பாரம்பரிய புடவை அணிவது நீச்சலுக்கு பாதகமாக இருப்பதால், பந்தயத்தில் பங்கேற்கும் பெண்களுக்கு டிராக் சூட் வழங்கப்பட்டுள்ளது.

### உலகக் கோப்பை செஸ்: பிரக்ஞானந்தா அசத்தல்



- ❖ அஜர்பைஜானில் நடைபெறும் உலகக் கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் "ஆர்.பிரக்ஞானந்தா", போட்டித் தரவரிசையில் 2–ஆம் இடத்திலிருந்த அமெரிக்காவின் ஹிகாரு நகமுராவை வீழ்த்தி 4–ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.
- ❖ 3–ஆவது சுற்றில் இருவரும் மோதிய 2 ஆட்டங்களும் டிராவில் முடிய, டை–பிரேக்கரில் பிரக்ஞானந்தா வென்று அசத்தினார்.
- ❖ அடுத்த சுற்றில் அவர், ஹங்கேரியின் ஃபெரென்க் பெர்க்ஸை எதிர்கொள்கிறார். இந்தியரான "டி.குகேஷும்" – ரஷியாவின் ஆண்ட்ரே எசிபென் கோவை வீழ்த்தி 4–ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளார்.

## திட்டங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு

### "கிசான் கல்யாண் யோஜனா"




- ❖ **2023–2024** நிதியாண்டுக்கான முதலமைச்சரின் கிசான் கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் தகுதியான விவசாயிகளுக்கு **6,000** ரூபாய் வழங்க மத்தியப் பிரதேச அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. கிராம பஞ்சாயத்து செயலாளர்களுக்கு "ஏழாவது ஊதியக்குழுவின் பலனை வழங்கவும்" அமைச்சரவை முடிவு செய்தது.
- ❖ இதற்காக **178.88** கோடி ரூபாய் கூடுதல் செலவு செய்யப்படும்.

## அறிவியல் & தொழில்நுட்பம்

### நிலவை ஆராய "லூனா விண்கலத்தை விண்ணிற்கு அனுப்பியது ரஷ்யா"

- ❖ இந்தியாவின் சந்திரயான் 3_விண்கலத்திற்கு போட்டியாக நிலவை ஆராயும் வகையில் ரஷ்யாவின் "லூனா 25 " விண்ணில் ஏவப்பட்டுள்ளது.
- ❖ நிலவின் தென் துருவத்தை ஆராய்வதற்காக அமெரிக்கா, சீனா உள்ளிட்ட வல்லரசு நாடுகள் முனைப்பு காட்டி வரும் நிலையில், இந்தியா சார்பில் ஏவப்பட்ட சந்திரயான் 3 விண்கலம் அதன் பயணத்தை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறது.
- ❖ சந்திரயான் 3 விண்கலம் வரும் 23–ம் தேதி நிலவில் தரை இறங்க உள்ளது.

SHANMUGAM IAS ACADEMY



- இந்த நிலையில், அதே தென் துருவத்தில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்கி நிலவில் தண்ணீர் உள்ளதா என்பதை ஆராய்வதற்காக ரஷ்யா லூனா 25 என்ற விண்கலத்தை விண்ணில் ஏவியுள்ளது.
- 1,800கிலோ எடை கொண்ட லூனா 25 செயற்கைகோள் நிலவின் மேற்பரப்பில் பனிக் கட்டிகள், கனிமங்கள், எரிபொருள் ஆக்சிஜன், குடிநீர் போன்றவற்றை ஆய்வு செய்யும்.

## சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் தன்மை

### ஹவாய் காட்டுத் தீ: பலி 55–ஆக உயர்வு

- அமெரிக்காவின் ஹவாய் மாகாணத்திலுள்ள மாவி தீவில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 55–ஆக அதிகரித்துள்ளது.
- மாவி தீவில் ஏற்பட்ட காட்டுத் தீயால் பாதிக்கப்பட்டுள்ள ஹலேனா, புலேஹு மற்றும் மத்தியப் பகுதிகளில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 55–ஆ உயர்ந்துள்ளது.
- காட்டுத் தீயில் சிக்கி உயிரிழந் திருக்கக் கூடியவர்களைக் கண்டறிந்து உடல்களை மீட்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அதிகாரிகள் கூறினர். அமெரிக்காவின் ஹவாய் மாகாணம், மாவி தீவில் புதன்கிழமை திடீரென காட்டுத் தீ மிக வேகமாகப் பரவியது. இதில், 1,700–களில் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க சுற்றுலாத் தலமான லஹேனா நகரம் உள்ளிட்டபகுதிகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.
- லஹேனா நகரில் இந்தியாவிலிருந்து 150 ஆண்டுகளுக்கு முன்னர் கொண்டு வந்து நடப்பட்ட பழைமை வாய்ந்த ஆலமரமும் தீயில் கருகியது.
- காட்டுத் தீ பரவிய நேரத்தில் ஹவாய் தீவுக்கு தெற்கே வீசிய தோரா புயல் காரணமாக அந்த பகுதியில் காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது.
- வறண்ட சூழல், காற்றில் குறைவான ஈரப்பதம், வேகமான காற்று ஆகிய மூன்றும் சேர்ந்து காட்டுத் தீயை வேகமாகப் பரவச் செய்ததாகக் கூறப்படுகிறது. அமெரிக்காவில் இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள மிக மோசமான காட்டுத் தீ சம்பவம் இதுவாகும். கடந்த 2018–இல் கலிஃபோர் னியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 85 பேர் பலியாகி, சுமார் 19,000 வீடுகள் தீக்கிரையாகினது நினைவுகூரத் தக்கது.

SHANMUGAM IAS ACADEMY

## தமிழக நடப்பு விவகாரங்கள்

### காவிரி: உச்சநீதிமன்றம் செல்ல தமிழக அரசு முடிவு

- காவிரி நதிநீர் விவகாரத்தில் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் விரைவில் வழக்கு தொடரப்படும் என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.
- தில்லியில் காவிரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தின் (சி.டபிள்யு. எம்.ஏ.) 22–ஆவது கூட்டம் நடைபெற்றது.
- இந்தக் கூட்டத்தில் தமிழகத்துக்கு வர வேண்டிய 37.97 டிஎம்சி நீர் பற்றாக்குறையை கர்நாடகம் வழங்க உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்க எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை.
- இந்தக் கூட்டத்திலிருந்து தமிழக நீர்வளத் துறை செயலர் சந்தீப் சக்சேனா உள்ளிட்ட அதிகாரிகள் பாதியிலேயே வெளிநடப்பு செய்தனர் இதையடுத்து உச்சநீதி மன்றம் செல்லும் முடிவை தமிழக அரசு எடுத்துள்ளது.

- ஜூன் முதல் ஆகஸ்ட் 11–ஆம்தேதி வரையில் தமிழகத்துக்கு 53.77 டிஎம்சி. தண்ணீர் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஆனால், கர்நாடக அரசு வெறும் 15.79 டி.எம்.சி. நீரை மட்டுமே வழங்கியுள்ளது.
- பற்றாக்குறை நீரின் அளவு 37.97 டி.எம்.சி.யாகும்.
- அந்தக் கூட்டத்தில் தமிழகத்துக்குத் தேவையான காவிரி நீர் அளவு குறித்து கடுமையாக வலியுறுத்தப்பட்டது.
- கர்நாடக அதிகாரிகள் நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு, 15,000 கன அடிக்குப் பதிலாக 8,000 கனஅடி மட்டும்தான் தண்ணீர் திறக்கப்படும் என்றும், அதுவும் ஆகஸ்ட் 22 வரையில் மட்டுமே அளிக்கப்படும் என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தனர்.
- கர்நாடகத்தில் உள்ள நான்கு அணைகளின் மொத்த கொள்ளளவு 114.571 டி.எம்.சி. இந்த அணைகளில் 93.535 டி.எம்.சி. தண்ணீர் தேங்கியுள்ளது.
- இது கர்நாடக அணைகளின் மொத்த நீர் இருப்பில் 82 சதவீதமாகும்.

## மாநில நடப்பு விவகாரங்கள்

### முதல் வேளாண் தரவு பரிமாற்றம் மற்றும் வேளாண் தரவு மேலாண்மை கட்டமைப்பு




- இந்தியாவின் "முதல் வேளாண் தரவு பரிமாற்றம் மற்றும் வேளாண் தரவு மேலாண்மை கட்டமைப்பை" ஹைதராபாத்தில் தெலுங்கானா அறிமுகப்படுத்துகிறது.
- ஏ டெக்ஸ் (ADeX) இயங்குதளமானது விவசாயத் துறைக்கான "டிஜிட்டல் பொது உள்கட்டமைப்புக்காக" (DPI) உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்த முயற்சிகள், உணவு முறைகளை மாற்றியமைக்கவும், விவசாயிகளின் வருமானத்தை மேம்படுத்தவும் புதுமை மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் நாட்டை முன்னணியில் இருந்து வழிநடத்த உதவுகின்றன.

SHANMUGAM IAS ACADEMY

## நாகாலாந்தின் "முதல் நாகா பாரம்பரிய உணவு ஆய்வகம்" கோஹிமா மாவட்டத்தில் உள்ள ஜாப்ஃபு கிறிஸ்தவக் கல்லூரியில் தொடங்கப்பட்டது.



- தேசிய கல்விக் கொள்கை 2020ன் கீழ், ஜாப்ஃபு கிறிஸ்தவக் கல்லூரி, நாகாலாந்து பல்கலைக்கழகத்தின் கீழ் "நாகா பாரம்பரிய உணவுத் திறன்களை மேம்படுத்தும் பாடங்களைத் தொடங்கியுள்ளது .
- இதில், நாகாலாந்தின் 15 பழங்குடியினரின் முக்கிய உணவுகள் ஆய்வு செய்யப்பட்டு, சமைத்து, நாகா உணவு கலாச்சார அடையாளத்தை தக்கவைத்து பரப்புவதற்காக ஆய்வு செய்யப்படும்.
- அதன் 16 ஏக்கர் வளாகத்தில், கல்லூரி அதன் சுற்றுச்சூழலுக்கு நன்கு பொருந்தக்கூடிய பல பழ மரங்கள் மற்றும் பிற பருவகால பழங்களை பாதுகாத்து வருகிறது.
- மாணவர்கள் பட்டப்படிப்புடன் விவசாயம், மலர் வளர்ப்பு, தோட்டக்கலை, கலை மற்றும் கைவினைப் பொருட்கள் போன்றவற்றிலும் கல்வி கற்கலாம்.

# தேசிய நடப்பு விவகாரங்கள்

## 3 குற்றவியல் சட்டங்களை மாற்ற மசோதாக்கள்

- பிரிட்டிஷ் ஆட்சிக் கால குற்றவியல் சட்டங்களை மாற்ற வகை செய்யும் 3 மசோதாக்கள் மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டன. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவற்றை தாக்கல் செய்தார்.
- இந்திய தண்டனைச் சட்டம் (ஐபிசி) 1860–ஐ மாற்றம் செய்ய "பாரதிய நியாய சம் ஹிதா (பிஎன்எஸ்) மசோதா 2023" என்ற மசோதா,
- குற்றவியல் நடைமுறைச் சட்டம் (சிஆர்பிஏ) 1898–ஐ மாற்றம் செய்ய "பாரதிய நாகரிக் சுரக்ஷா சம்ஹிதா (பிஎன் எஸ்எஸ்) மசோதா 2023" என்ற மசோதா,
- இந்திய ஆதாரச் சட்டம் 1872–ஐ மாற்றம் செய்ய "பாரதிய சாக்ஷிய (பிஎஸ்) மசோதா 2023" மசோதாவும் அறிமுகம் செய்யப்பட்டன.

## இணையவழி விளையாட்டுக்கு 28% ஜிஎஸ்டி: மசோதாவுக்கு நாடாளுமன்றம் ஒப்புதல்

- இணையவழி விளையாட்டுகள், கேசினோ மற்றும் குதிரைப் பந்தைய கிளப்புகளுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி (சரக்கு மற்றும் சேவை வரி) விதிக்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதாவுக்கு மக்களவையில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

SHANMUGAM IAS ACADEMY

- 'மத்திய சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதா 2023" மற்றும் 'ஒருங்கிணைந்த சரக்கு மற்றும் சேவை வரி திருத்த மசோதா 2023' ஆகிய இந்த மசோதாக்களை மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் இரு அவைகளிலும் அறிமுகம் செய்துவைத்தார்.
- இந்தச் சட்டத்திருத்தத்தின் படி, "கேசினோ மற்றும் குதிரைப் பந்தய கிளப்புகளுக்கு 28 சதவீத ஜிஎஸ்டி விதிக்கும் வகையில்" துணைப் பிரிவும் விளக்கமும், மத்திய சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டம் (சிஜிஎஸ்டி) 2017–இன் அட்டவணை 3–இல் சேர்க்கப்படும்.

SHANMUGAM IAS ACADEMY